**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 35/2024**

**வாக்குமூலம்: வா.சா.4 – லீலாவதி (கிராம நிர்வாக அலுவலர்)**

**17.03.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

பழனி வட்டம், வாடிப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி கிராமத்தில் எவ்வளவு காலமாக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சுமார் 2–1/2 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்ததற்கு மேலதிகாரியான வட்டாட்சியரிடம் அனுமதி பெற்று வந்துள்ளேனா என்றால் அனுமதி பெற்றுதான் வந்துள்ளேன். எதற்காக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்த்திலிருந்து அழைப்பானை வந்தது என்றால் கணேசன் என்பவர் காணாமல் போனது சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி கணேசன் என்பவரைப் பற்றி எங்கள் கிராமத்தில் கள விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி விசாரணையில் என்ன தெரிய வந்தது என்றால் கணேசன் என்பவர் சுமார் 22 வருடங்களுக்கு மேலாக காணாமல் போய் விட்டார் என்ற விபரம் உள்ளூர் விசாரணையில் தெரிந்து கொண்டேன். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா, இல்லையா என்பது பற்றி தெரியவில்லை. கள விசாரணையின் போது பொது மக்களிடம் இருந்து ஆணையுறுதி பெறுவோம் என்றால் பெறுவோம். கணேசன் காணாமல் போனது சம்பந்தமாக உள்ளூர் மக்கள் வெங்கடபதி, சௌந்தர்ராஜன், மகேஷ், கோபால் சாமி ஆகியோரிடம் விசாரணை செய்வதாக முதல் விசாரணையில் கூறியுள்ளேன். அவர்களிடமிருந்து ஆணையுறுதி பெற்றேனா என்றால் இல்லை. கணேசன் காணாமல் போனது சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாத விபரம் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன்.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.